**Minutes of Public Hearing conducted on 30/09/2025 at 11:00 A.M. in Alagu Mahal Near to Sengulam Railway Station and Sengulam vilaku Bus stop, Trivandrum Main Road, Sengulam, with respect to the proposed Rough stone and Gravel Quarry of Tvl.Sri Durgambika Blue Metals over an extent of 1.95.5 Ha in S.F. Nos. 570(P) & 571(P) of Tharuvai Village, Palayamkottai Taluk, Tirunelveli District**

**Details of participants in this meeting.**

| | | |
|---|---|---|
| 1. Thiru.P.Valli Kannu | - | Revenue Divisional Officer,(In-Charge), Tirunelvelil |
| 2. Er.D.M.Krishnababu.,M.E | - | District Environmental Engineer, TNPC Board, Tirunelveli. |
| 3. Er.A.Jeba.,M.E | - | Assistant Engineer, O/o.District Environmental Engineer, TNPC Board, Tirunelveli. |

Public and Government Officials – 262 NosCopy of Attendence (Annexure-1)

The public hearing under EIA Notifications, 2006 for proposed Rough stone and Gravel Quarry of Tvl.Sri Durgambika Blue Metals over an extent of 1.95.5 Ha in S.F. Nos. 570(P) & 571(P) of Tharuvai Village, Palayamkottai Taluk, Tirunelveli District was conducted on 30/09/2025 at 11.00 A.M in Alagu Mahal Near to Sengulam Railway station and Sengulam Vilaku Bus stop, Trivandrum Main Road, Sengulam,

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer (In-Charge) public, Government officials and industry representatives who have attended the public hearing. He informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notifications, 2006. In this regard, public notices were already published in “Dinathanthi” & “The New Indian Express” on 23/08/2025 and also announcement made to the public through vehicle announcement and distributing pamphlets.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu.

Then the Environmental consultant started explaining the project of Tvl.Sri Durgambika Blue Metals Rough Stone and Gravel Quarry to the public through a Power Point Presentation.

The District Environmental Engineer has requested the public to express their views one by one on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the SEIAA, TamilNadu for taking necessary action.

Since no one came to expressing their views for a while, the District Environmental Engineer, Tirunelveli said that written petitions can also be submitted, and 151 petitions were received at the public hearing meeting.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

**Mr. S.P.Muthuraman, Environmentalist, Tirunelveli :-**

Mr. S.P. Muthuraman said that due to safety issues in mining near the proposed quarry, a major quarry accident occurred in the Adaimithppankulam on 14/05/2022, which was widely reported in India, and six dead bodies were recovered by the National Disaster Management and Rescue Team after struggling for 10 days in that accident. He also said that after the accident, no one had applied for new quarry permission in this area, and now started to apply for mining permission again in this area after people forgetting the details.

He said that land area with quarries in this area look like patches of puncture in tire and questioned why further quarrying has not been stopped in this area.

He said that after the completion of the mining project, they are not properly closed, which causes death of goats, cows and people. He said that there are more than 15 abandoned quarries in the area, which are not properly closed after the completion of the quarrying as committed in the mining closure plan.

He also said that the Tamil Nadu Government has recently issued a Government order, in which the concerned lease holders should be instructed to establish proper fences to protect the quarry pits after expiration of quarry lease, otherwise, the Government can establish proper fences around abandoned quarries by using the green fund and District mineral fund. He questioned who will take action for the same and said that accidents continue to occur as the District Administration has not taken any action even after the issuance of the Government order.

He said that in the Environmental Impact Assessment report, it was mentioned that three quarries are operating near the proposed quarry, but all three quarries are currently not in operation and this hearing was held by giving a false statement. Further, it was also falsely mentioned that the S.Kasirajan quarry is a proposed one, whereas it is under operation now.

According to Mines Act, Rule -22(C), only persons with recognized educational qualifications should be allowed to prepare a mining plan but Mr. Natarajan, who has prepared the mining plan has a license for the period from 21.09.2021 to 22.12.2021 only and he questioned how can treat the mining plan prepared by presently unlicensed person as a valid one now.

He also said that the Environmental Impact Assessment study is carried out only for three months and said that the environmental impact study should be carried out in all four seasons. Granting environmental clearance based on the study conducted on only one season is not correct.

He said that the Environmental Impact Assessment report had mentioned that there was only one abandoned quarry, but there were more than fifteen abandoned

quarries in the area, and he requested to conduct a proper study. He further stated that there are abandoned quarries in Survey numbers 522, 523, 524, 525, 534, 535, 529, 531, 568 but the project report has given false information that only one quarry is abandoned.

The Directorate of Mines Safety, New Delhi, in its notification dated 31.01.2003, stated that the area 500m around the quarry is designated as a safety zone but the quarries are maintaining only 50 m or 5 m as a safety distance and a drone survey was conducted during the year 2024 in the nearby village area and reported that many quarries were carried out mining to a greater depth than the permitted level and that the quarries were operating illegally at night.

The National Green Tribunal, South Zone, New Delhi has issued an order that there should be a gap of 200 m between new quarries proposed after 21.07.2020. But he questioned how the proposed quarry can be allowed, where already a quarry located in the part of same Survey no. 570.

He stated that as per the land document registered as document number 840 of the year 1904, on pages 82-137 in the Palayamkottai 1 Sub-Register office, Book I, Section 206, dated 30.08.1904, field numbers 570 and 571 were registered in the name of Abdul Rahman Tarakan and that his family members had also made a partition in the 2006, and therefore, before allowing this quarry, the ownership of the land should be investigated.

He also said that only 10 ton capacity vehicles can be operated in on Village Panchayat roads, but all quarries are using 30-ton capacity heavy vehicles instead of 10-ton heavy vehicles, which is affecting the peaceful rural environment, and no action being taken for this by the Mines Department and the Revenue Department. He said that when quarries are established, there are more indirect impact than the direct impact. He said that when the wind blows, a lot of dust emitted from the quarries, which cannot be controlled, and affecting the villagers.

He said that recently, a closure order has been issued by the District Collector for a quarry in Tenkasi district, and that 100 heavy vehicles are used per day in a quarry, and 4 to 5 quarries are operating in that area, and he questioned what will happen to the rural areas since 500 heavy vehicles are passing through daily.

He said that the Environmental Impact Assessment report had been prepared by examining only the area around 500 m and it was not mentioned how many quarries were operating in the nearby village. He said that the Kandithankulam was near this quarry and there was a pond near this quarry. He said that if many quarries were operating in one place, the impact will be greater. He said that the Environmental Impact Assessment Authority was issuing Environmental Clearance to the quarries as if they were handing out pamphlets. He also said that the Chairman of the Tamil Nadu Environmental Protection Agency, Mr.Mukilan, had protested in front of the Environmental Impact Assessment Authority and urged that Environmental Clearance

should not be issued as if they were handing out pamphlets and that the public opinion should be examined in a public hearing. He further said that the public hearing is not a meeting to express support or opposition for a project, but a meeting to record the impact on the environment, humans and living beings if permission is given to the quarries, and to examine them.

As no public were come forward to record their views, the District Environmental Engineer told that all the views informed will be recorded and will submit along with videography to state Environmental Impact Assessment Authority to take necessary action and thanked all the public attended the meeting.

The meeting came to the end.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tirunelveli**

**Revenue Divisional Officer (In-Charge),**
**Tirunelveli District**

**Annexure:**

1. Copy of Attendence ( Total - 34Pages, 262Participants)
2. Pendrive consisting of the Recorded Video of the entire public hearing.
3. Press release Notice (Tamil & English)
4. Written Petition received from the public for this proposed Project-151Nos
5. Written Petition received from the public to this office for this proposed Project-2 Nos

**திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம், புல எண். 570 (P) & 571 (P) விஸ்தீரணம் 1.95.5 ஹெக்டேர், பரப்பளவில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட தி/ள்.ஸ்ரீ துர்காம்பிகா புளூ மெட்டல் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 30/09/2025 அன்று காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், செங்குளம், செங்குளம் இரயில் நிலையம் மற்றும் செங்குளம் விலக்கு பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அழகு மஹாலில் வைத்து நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. P. வள்ளிக்கண்ணு, | – | வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு), திருநெல்வேலி. |
| 2. | திரு து.மு. கிருஷ்ணபாபு, எம்.இ., | – | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி. |
| 3. | திருமதி.அ.ஜெபா, எம்.இ., | – | உதவி பொறியாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி. |

பொது மக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 262 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

*********

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம், புல எண். 570 (P) & 571 (P) விஸ்தீரணம் 1.95.5 ஹெக்டேர், பரப்பளவில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட தி/ள். ஸ்ரீ துர்காம்பிகா புளூ மெட்டல் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 30/09/2025 அன்று காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) அவர்களையும் மற்றும் பங்கேற்க வந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து 23/08/2025 அன்று "தினத்தந்தி" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததை சுட்டிக் காட்டினார். அதன்பின் மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொது மக்களுக்கு கடந்த வாரம் துண்டு பிரசுரங்கள், வாகன பிராச்சாரம் மூலம் அறிவிப்பு செய்ததை கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவுசெய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, விளக்கத்திற்கு பின் பொது மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என கூறினார்.

அதன்பின் உத்தேசிக்கப்பட்ட தி/ள்.ஸ்ரீ துர்காம்பிகா புளூ மெட்டல் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாக புள்ளிவிளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்கள்.

அதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ அளிக்கலாம் எனவும் திட்டம் குறித்த கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

சற்று நேரம் வரை எவரும் கருத்து சொல்ல வராததால், எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி கூறியதை தொடர்ந்து 151 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு.

**திரு.எஸ்.பி.முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி :-**

திரு.எஸ்.பி.முத்துராமன் அவர்கள் பேசுகையில் தற்போது கல்குவாரி அமையவுள்ள இடத்திற்கு அருகில் முறையாக பாதுகாப்பாக சுரங்கம் செய்யப்படாத காரணத்தால் 14/05/2022 அன்று அடைமிதப்பான்குளத்தில் மிக பெரிய கல்குவாரி விபத்து ஏற்பட்டதாகவும், அது இந்திய அளவில் பெரிதாக பேசப்பட்டதாகவும், இந்த விபத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை மீட்பு குழுவானது 10 நாட்கள் போராடி ஆறு சடலங்களை கைப்பற்றியதாகவும் தெரிவித்தார். மேலும் விபத்து நடந்த பிறகு இப்பகுதியில் புதிய கல்குவாரிக்கு அனுமதிக்காக யாரும் விண்ணப்பிக்கவில்லை எனவும், தற்போது மக்கள் விபத்தை பற்றி மறந்தவுடன் மீண்டும் சுரங்க அனுமதிக்காக இப்பகுதியில் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது குவாரி அமையவுள்ள பகுதியில் டயரில் காணப்படும் பஞ்சர்கள் போல் பல குவாரிகள் உள்ளதாகவும், இப்பகுதியில் இதற்கு மேல் சுரங்க பணிகள் மேற்கொள்ளக்கூடாது என்று ஏன் சொல்வதில்லை என கேள்வி எழுப்பினார்.

சுரங்க திட்டம் முடிவுற்ற பிறகு, அவை முறையாக முடப்படாமல் இருப்பதாகவும், இதனால் அக்குழிகளில் ஆடு, மாடு மற்றும் மனிதர்கள் தவறி விழுந்து இறந்துவிடுவதாகவும் கூறினார். இப்பகுதியில் 15–க்கும் மேற்பட்ட கைவிடப்பட்ட கல்குவாரிகள் காணப்படுவதாகவும், இவ்வாறு காணப்படும் கல்குவாரிகளானது Mines Closure Plan–ல் உறுதி அளித்துள்ளப்படி திட்டம் முடிவுற்ற பின் அக்கல் குவாரிகள் மூடப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், கூறுகையில் சமீபத்தில் தமிழ்நாடு அரசு ஒரு அரசாணை வெளியிட்டுள்ளதாகவும், அதில் குவாரி குத்தகை காலம் முடிந்து செயல்பாடு இன்றி உள்ள குவாரி குழிகளை உரிய வேலி அமைத்து பாதுகாக்க சம்மந்தப்பட்ட குத்தகைகாரருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் எனவும், இல்லையென்றால் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள பசுமை நிதி மற்றும் மாவட்ட கனிம நிதியை பயன்படுத்தி முறையாக வேலிகள் அமைத்து பாதுகாக்கலாம் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஆனால், அதற்கு யார் நடவடிக்கை எடுப்பது எனவும் கேள்வி எழுப்பியவர். அரசாணை வெளியிட்ட பின்னரும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காததால் விபத்துகள் தொடர்ந்து நடப்பதாகவும் தெரிவித்தார்.

மேற்படி, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு அருகில் மூன்று குவாரிகள் செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் அந்த மூன்று குவாரிகளும் தற்போது செயல்பாட்டில் இல்லை என்பதாகவும், ஆனால் அறிக்கையில் மூன்று குவாரிகளும் செயல்பாட்டில் உள்ளது என்று பொய்யான அறிக்கை அளித்து இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்துவதாக தெரிவித்தார்.

மேலும், அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட S.காசிராஜன் குவாரியானது இயக்கத்தில் உள்ளதாகவும், ஆனால் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கூறி பொய்யான அறிக்கை அளித்துள்ளதாக கூறினார்.

Mines Act Rule –22(c)–ன்படி சுரங்க திட்டத்தை தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி தகுதியுடைய நபர்கள் மட்டுமே மேற்கொள்ளவேண்டும். ஆனால் திட்ட அறிக்கையில் திரு.நடராஜன் என்பவர் சுரங்க திட்டத்தை தயாரித்துள்ளதாகவும், அவருக்கு 21.09.2021 முதல் 22.12.2021 வரை சுரங்க திட்டத்தை தயாரிக்க உரிமம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், அதனால் தற்பொழுது அங்கீகாரம் இல்லாத நபரால் தயாரிக்கப்பட்ட சுரங்க திட்டமானது தற்பொழுது எவ்வாறு செல்லுபடியாகும் எனவும் கேள்வி எழுப்பினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக கூறியவர், சுரங்க அனுமதியால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து நான்கு காலநிலைகளிலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும், ஆனால் ஒரே ஒரு காலநிலையில் மட்டும் ஆய்வு நடத்தி சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதாகவும், அது தவறு எனவும் கூறினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் ஒரே ஒரு கைவிடப்பட்ட கல்குவாரி மட்டுமே உள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால், அப்பகுதியில் பதினைந்திற்க்கும் மேற்பட்ட கைவிடப்பட்ட குவாரிகள் இருப்பதாகவும், அது குறித்து முறையாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், புல எண்கள் 522, 523, 524, 525, 534, 535, 529, 531, 568 ஆகியவற்றில் கைவிடப்பட்ட குவாரிகள் இருப்பதாகவும், ஆனால் ஒரே ஒரு குவாரிதான் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாக திட்ட அறிக்கையில் பொய்யான தகவல் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

புது டெல்லியில் அமைந்துள்ள சுரங்க பாதுகாப்பு இயக்குநரகம், 31.01.2003–ல் வெளியிட்ட அறிவிப்பில் குவாரி செயல்படும் இடத்தை சுற்றியுள்ள 500 மீ வரை பாதுகாப்பு மண்டலம் என குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் குவாரிகள் 50 மீ அல்லது 5 மீ மட்டுமே பாதுகாப்பு தூரமாக கடைப்பிடிப்பதாகவும் கூறினார். 2024– ஆம் ஆண்டில் தருவை கிராம பகுதியில் குவாரிகளின் செயல்பாடுகள் குறித்து ட்ரோன் மூலம் ஆய்வு செய்ததாகவும், ஆய்வில் ஏராளமான குவாரிகளானது அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக ஆழத்தில் கனிமங்களை வெட்டி எடுத்திருப்பதாகவும், மேலும் குவாரிகளானது சட்டவிரோதமாக இரவு நேரங்களில் இயங்குவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

புதுடெல்லியில் உள்ள தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் 21.07.2020–க்கு பின் தொடங்கும் புதிய குவாரிகளுக்கு இடையே 200 மீ இடைவெளி கண்டிப்பாக இருக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியானது புல எண்.570 பகுதியில் அமையவுள்ளதாகவும் ஏற்கனவே 570 பகுதியில் ஒரு திட்ட முடிவுற்ற குவாரியுள்ளதாகவும் தெரிவித்து இதை எவ்வாறு அனுமதிக்கலாம் என வினவினார்.

30.08.1904, பாளையங்கோட்டை 1 இணை சார் பதிவலுவலகத்தில் ஒன்றாம் புத்தகம் 206–ம் தொகுதியில் 82–137 வரையிலான பக்கங்களில் 1904 வருடத்திய 840 ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரப்படி தருவையிலுள்ள 570 மற்றும் 571 புல எண்கள் அப்துல் ரகுமான் தரகன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதாகவும், 2006–ஆம் ஆண்டு அவரின் குடும்ப உறுப்பினர்கள் ஒரு பாக பிரிவினை ஏற்படுத்தியுள்ளதாகவும், எனவே இந்த சுரங்கம் அனுமதிப்பதற்கு முன்பாக சுரங்கத்தின் நில உரிமை தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், கிராம ஊராட்சி சாலைகளில் ஒரு கனரக வாகனத்தில் 10 டன் அளவிலான கனிமம் மட்டுமே எடுத்துச்செல்லலாம் என உத்தரவு உள்ளதாகவும், ஆனால் அனைத்து குவாரிகளும் 10 டன் கனரக வாகனத்திற்கு பதிலாக 30 டன் கொண்ட கனரக வாகனங்களை உபயோகிக்கிறார்கள் எனவும், அதனால் அமைதியான கிராம சூழல் பாதிக்கப்படுவதாகவும், இதற்கு கனிம வளத்துறை மற்றும் வருவாய் துறை உள்ளிட்டோர் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் கூறினார். குவாரிகள் அமையும் போது நேரிடையாக ஏற்படும் பாதிப்பை விட மறைமுகமாக அதிக பாதிப்பு ஏற்படுவதாக தெரிவித்தார். காற்று வீசும் போது குவாரிகளில் இருந்து அதிக தூசிகள் பறப்பதாகவும் இதனை கட்டுப்படுத்த முடியாது எனவும், இதனால் கிராம மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சமீபத்தில் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஒரு குவாரிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு குவாரிக்கு ஒரு நாளிற்கு 100 கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், அந்த பகுதியில் 4 முதல் 5 குவாரிகள் செயல்பாட்டில் உள்ளதால், தினமும் 500 கனரக வாகனங்கள் சென்று வருவதால் அக்கிராம பகுதிகள் என்னவாகும் என கேள்வி எழுப்பினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையானது 500 மீ சுற்றியுள்ள பகுதிகளை மட்டுமே ஆய்வு மேற்கொண்டு தயாரித்துள்ளனர் எனவும், தருவை கிராமத்தில் எத்தனை குவாரிகள் இயங்குகின்றன என்று குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார். கண்டித்தான்குளம் பகுதி இந்த குவாரிக்கு அருகில் இருப்பதாகவும், இந்த குவாரியின் அருகில் குளம் இருப்பதாகவும் தெரிவித்தார். ஒரே இடத்தில் நிறைய குவாரிகள் இயங்கினால் அதன் பாதிப்பு அதிகமாக இருக்கும் எனவும் தெரிவித்தார். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம் கல்குவாரிகளுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்குவது போல சுற்றுச்சூழல் அனுமதி வழங்கிவருவதாகவும், அதை கண்டித்து தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் திரு.முகிலன் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி துண்டு பிரசுரங்கள் வழங்குவது போல சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக்கூடாது எனவும் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் தெரிவிக்கப்படும் பொது மக்களின் கருத்தை ஆய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தியதாகவும் கூறினார்.

மேலும், பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் என்பது ஆதரவு அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் கூட்டம் இல்லை என்றும், குவாரிகளுக்கு அனுமதி அளித்தால் அங்கு சுற்றுச்சூழல், மனிதர்கள் மற்றும் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து பதிவு செய்வதற்கான கூட்டம் என்றும், அவற்றை ஆய்வு செய்து அதன் பின்னரே அனுமதி வழங்க வேண்டும் எனவும், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து பொது மக்கள் தங்களது கருத்தினை தெரிவிக்க வேண்டும் என்பதற்காக தான் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுவதாகவும், எனவே பொது மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் கருத்துகளை தெரிவிக்க வேண்டும் எனவும் கூறினார்.

அதன்பின் வேறு யாரும் கருத்து தெரிவிக்க வராததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் குறிப்புகளும், வீடியோவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்ததுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்டசுற்றுச்சூழல்பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
திருநெல்வேலி

வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு),
திருநெல்வேலி.

<u>இணைப்புகள்:</u>

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் – 34 பக்கங்கள், 262 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலிமற்றும்ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 151 எண்ணங்கள்.
5. கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்கள் – 2 எண்ணங்கள்.